சுற்றறிக்கை இலக்கம்: 10/2006 II

எனது இல: எம்/19/17 விவித

திகதி: 2006.09.05

அனைத்து விவாகப் பதிவாளர்களுக்கும்,

<u>விவாகங்களைப் பதிவு செய்வதற்கான அறிவுறுத்தல்கள்</u>

விவாகங்களைப் பதிவு செய்யும் போது பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள் தொடர்பாக என்னால் வெளியிடப்பட்ட இலக்கம் 01/2001 மற்றும் 2001.06.14 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இது தொடர்புடையது.

2. விவாகப் பதிவின் போது சட்டப்பூர்வமாகப் பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் நடைமுறைகள் குறித்து விவாகப் பதிவாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்ட போதிலும், சில பதிவாளர்கள் அவ்வுத்தரவுகளையும் ஒழுங்குவிதிகளையும் அலட்சியப்படுத்திச் செயல்படும் சந்தர்ப்பங்கள் குறித்து எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த முறைப்பாடுகளின்படி, சில விவாகப் பதிவாளர்கள் பின்வரும் தவறான செயல்களில் ஈடுபடுவது வெளிப்பட்டுள்ளது:

I. அலுவலகத்திற்கு வெளியே விவாகத்தைப் பதிவு செய்யப் பொறுப்பேற்றுக் கொண்டு, குறித்த நேரத்திற்குப் பதிவாளர் சமூகமளிக்காமல் இருத்தல்.
II. சில பதிவாளர்கள் ஒரே நேரத்தில் பல விவாகங்களைப் பதிவு செய்யப் பொறுப்பேற்பதால், சில விவாகங்களை நிர்ணயிக்கப்பட்ட சுப நேரத்தின்படி செய்ய முடியாமல் போதல்.
III. சில விவாகப் பதிவாளர்கள் விவாகம் தொடர்பான ஆவணங்களுக்கு, உரிய திகதிக்கு முன்னரே தரப்பினரின் கையொப்பங்களைப் பெற நடவடிக்கை எடுத்தல்.
IV. சில விவாகப் பதிவுகளுக்குப் பதிவாளர் சமூகமளிக்காமல், அவருக்குப் பதிலாக வேறு நபர்களை அனுப்பி வைத்தல்.
V. சிறுவயதினரின் விவாகங்களை பதிவ செய்தல்.

3. மேற்கூறிய தவறுகள் விவாகப் பதிவுச் சட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை மீறும் செயல்களாகும். விவாகப் பதிவாளர்கள் அலுவலகத்திற்கு வெளியே விவாகங்களைப் பதிவு செய்யப் பொறுப்பேற்கும் போது, குறித்த நேரங்களுக்குத் தம்மால் நேரில் சமூகமளிக்கக்கூடிய விவாகங்களை மட்டுமே பொறுப்பேற்க வேண்டும். விவாகத்தைப் பதிவு செய்வதற்கான சட்டப்பூர்வ அதிகாரம் விவாகப் பதிவாளருக்கு மட்டுமே உள்ளதால், அதற்காக வேறு எந்த நபரையும் ஈடுபடுத்தக் கூடாது.

4. விவாக ஆவணங்களை முன்னதாகவே தயாரித்து வைத்திருக்க முடியும் என்றாலும், குறித்த தினத்தில் தரப்பினர்களும் சாட்சிகள் அனைவரும் ஒரே நேரத்தில் சமூகமளித்தால் மட்டுமே அந்த ஆவணங்களில் கையொப்பங்களைப் பெற முடியும். கண்டி மற்றும் பொது விவாகப் பதிவுச் சட்டங்களின் கீழ் விவாகம் செய்வதற்கான குறைந்தபட்ச வயது 18 என்பதால், அந்த வயதுக்கு குறைந்தவர்களின் விவாகங்களை எக்காரணம் கொண்டும் பதிவு செய்யக்கூடாது. குறிப்பாக, தரப்பினரின் வயதை உறுதிப்படுத்துவதில் பதிவாளர் மிகுந்த அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

5. விவாகப் பதிவின் போது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளை முழுமையாகத் தவிர்த்துச் செயல்பட அனைத்து விவாகப் பதிவாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய தவறுகளை இழைக்கும் பதிவாளர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்தால், அவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

(ஒப்பம்)
பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக.
2. அனைத்து வலய அலுவலகங்கள் மற்றும் மேலதிக பதிவாளர் நாயகங்கள். - தகவலுக்காக.
3. அனைத்து மாவட்ட பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர்கள். - தகவலுக்காக.
4. அனைத்து காணிப் பதிவாளர்கள் - தகவலுக்காக.
5. செயலாளர், நாடளாவிய ரீதியிலான பதிவாளர்கள் சங்கம் - தகவலுக்காக.